

திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருக்கழுக்குன்றம் பேரூர், பாகம் எண் 266ல் நடைபெற்ற ”என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பரப்புரை கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு உரையாற்றினார். அருகில் திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியச் செயலாளர் வீ.தமிழ்மணி, பேரூராட்சி தலைவர் ஜி.டி.யுவராஜ் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (26.12.2025) சென்னை, பூங்கா நகர், ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில் ரூ.20.80 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடத்தை திறந்து வைத்தார். உடன் சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜெ.அசோக் குமார் முந்த்ரா மற்றும் அறங்காவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சங்களான மதச் சார்பின்மை, சோஷலிசம் வேரின்மீது வெந்நீரை ஊற்றுவதா?

# பண பலம், தந்திரங்களை செய்தாலும், பெரும்பான்மை இல்லாது ஆட்சி நடத்துவதுதான் பி.ஜே.பி.!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, டிச. 27-

பணபலத்தாலும், தந்திரங்களாலும் ஆட்சியில் இருக்கும் மோடி தலைமையிலான பிஜேபி அரசு அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக மதச் சார்பின்மையையும், சோஷலிச கோட்பாட்டையும் நசுக்கி வருகிறது. கிறிஸ்துமஸ் விழாவன்று நேரில் சென்று கிறித்துவர்களுக்கு வாழ்த்து சொல்லுகிறார் பிரதமர் மோடி! அதே நேரத்தில் பிரதமர் மோடியின் ஆர்.எஸ்.எஸ்., பிஜேபி வகையறாக்கள் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடும் கிறித்துவர்களைத் தாக்குகின்றனர்!! வரும் 2026 தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான தேர்தலில் இந்த மதவாத சக்திக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்; இல்லையெனில் மிஞ்சுவது காலித்தனம்தான் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள எச்சரிக்கை அறிக்கை வருமாறு:



**இரட்டை நாக்கு – இரட்டை வேடம்–**

- இவைகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுதான் ஆரியம் என்ற “விதைக்காது விளையும்” கழினியான ஆரியம்!

அந்த ஆரியத்தின் இன்றைய முழு வடிவமும், தன்மையும் கொண்டவைதான் அதன் தத்துவ வடிவமான ஆர்.எஸ்.எஸ். ஹிந்துத்துவா அமைப்பும், அதன் அரசியல் பிரிவான பா.ஜ.க. என்ற பழைய ‘ஜனசங்கம்’ ஆன தேர்தல் கட்சியும் ஆகும்.

**ரூ.6,654 கோடிக்கு மேல் தேர்தல் நிதி வசூல் பெற்று ஆட்சியைப் பிடித்த பிஜேபி**

என்ன தான் ஓங்கி வளர்ந்த அரசியல் கட்சி தோற்றமளித்தாலும், தேர்தலில் ரூ.6,654 கோடிக்கு மேல் தேர்தல் நிதியாகப் பெற்று, இன்று ‘மைனாரிட்டி, அரசாக’வே ஒன்றியத்தில் ஆட்சி புரிந்தாலும் மக்கள் ஆதரவை, நம்பிக்கையை இழந்து வரும் நிலைதான்! ஆளும் அரசியல் கட்சி என்றாலும் சில உத்திகள், பல தந்திரங்கள், ‘வாக்குத் திருட்டு’ போன்ற பல குற்றச்சாற்றுகளை மக்கள் மன்றத்தில் பெற்றாலும் அதனைச் சிறிதும் லட்சியம் செய்யாமல், பதவிப் பிரமாணம் எடுத்தாலும், அந்த அரசியலமைப்புச் சட்டத்தை நாளும் துடைத்தெறியும் செயற்பாடுகளை நடத்தி வருகிறது. ‘உள்ளொன்றும், புறமொன்றும்’ வைத்துள்ள ‘நடிப்புச் சுதேசிகளாக’ வாழ்ந்து ஜனநாயகத்தின் வேரில் நாளும் வெந்நீர் ஊற்றுகின்றனர்!

அனைவரது சகோதரத்துவத்தை வலியுறுத்துகிறது நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை. ஆனால் அதனை அறவே மீறி, தானடித்த மூப்பாக ஒரு யதேச் சாதிகாரத்தனத்தை நாளும் நிறுவி மகிழ்ச்சி அடைவதோடு மமதை கொண்டு ‘இராஜ்யபாரம்’ நடத்துகிறது!

‘மதச் சார்பற்ற சமதர்ம’ (SECULAR SOCIALIST) என்ற அடிப்படைக் கொள்கையை எதிர்த்து, சில நாள்களுக்கு முன், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன்பாகவத், ‘அரசியலமைப்புச் சட்டத்தின்துவக்கத்தில் அச் சொற்கள் இல்லையே, பிறகுதானே திருத்தமாக அச்சொற்கள் அதில் இடம் பெற்றன. அதனால் அதைக் கடைப்பிடிக்க வேண்டுமா என்ற பொருளில் பேசுகிறார்.’

இதுபற்றி அரசியல் நிர்ணய சபையில் அரசியலமைப்புச் சட்டம் முழு வடிவம் பெறு முன்னரே, அச்சொற்கள் அப்போதே இடம் பெற சில முக்கிய அறிஞர் பெரு மக்கள் வலியுறுத்திய போது, அதன் வரைவுக்குழுத் தலைவர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் கூறியது என்ன? படித்துப் பார்க்கட்டும்!

இந்த அரசியல் கூட்டத்தின் முழு உணர்வும் (SPIRT) அரசியல் சட்டத் தத்துவம் செக்குலர் - மதச்சார்பின்மையை முழு மூச்சாகக் கொண்டுள்ளதால், அதனைத் தனியாக இந்த இரண்டுசொற்களை சேர்த்துதான் ஆக வேண்டும் என்ற அவசியம் இல்லை; பிறகு தேவையானால் அதனை இணைத்துக் கொள்ளலாம் என்ற கருத்துடைய பதிலை விளக்கமாகத் தந்துள்ளார்.

“இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தமாகவே இச்சொற்கள் பிறகு இணைக்கப்பட்டன” என்ற ஆர்.எஸ்.எஸ். தலைவர் கூற்றுப்படி வாதமாக அதனை ஏற்றுக் கொண்டாலும்கூட, அதற்குக் கட்டுப்பட்டுதானே அனைவரும் நடக்க வேண்டும்! இதனை ஆர்.எஸ்.எஸ். மறுக்க முடியுமா?மறுப்பது சட்டப்படியானதா?

சமூகநீதியில் பொருளாதாரத்தைத் திணித்தது - அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது அல்லவா!

அப்படியானால் சமூகநீதியில், கல்வி வேலை வாய்ப்பில் சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட (SOCIALLY AN EDUCATIONALLY) என்றுதானே இருந்தது.

அதை இன்றைய ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.. ஒன்றிய ஆட்சி எப்படி 103ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தமாக, எதிர்க்கட்சியினர் எதிர்த்தும், புறக்கணித்தும் அதற்கு மாறாக அவசர அவசரமாக ஒரே வாரத்தில் குடியரசுத் தலைவர் ஒப்புதல் உட்பட பெற முடிகிறது!

‘உயர்ஜாதி ஏழைகள்’ என்ற பேரால் 10 சதவிகிதத்தை பார்ப்பனர் மற்றும் முன்னேறிய ஜாதியினர் படித்து பதவியில் உள்ள கூட்டத்தாருக்கே (EWS) “தாரை வார்த்த” கொடுமை எப்படி நடந்தது?

**அது நியாயமா?**

கிறிஸ்துமஸ் விழாவுக்குப் பிரதமர் நேரில் வாழ்த்துவதும், ஆர்.எஸ்.எஸ். வகையறாக்கள் கிறித்துவர்களைத் தாக்குவதும் இரட்டை வேடமல்லவா?

இதே போன்றே டில்லியில் கிறிஸ்துமஸ் விழாவுக்கு பிரதமர் நேரில் போய் வாழ்த்து கூறுகிறார். ஆனால் ஆர்.எஸ்.எஸ். அடித்தளத்தில்அமைந்த பஜ்ரங் தளம், விசுவ இந்து பரிஷத்காரர்கள் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் கிறிஸ்துமஸ் கொண்டாடும் கிறித்துவ சிறுபான்மையினர் மீது தாக்குதல்நடத்திதங்களதுஹிந்துத்துவ மதவெறித்தனத்தை காட்டி மகிழ்ந்துள்ளனரே!

**இதுபச்சையான இரட்டை வேடம் அல்லவா!**

இதைத்தான் நமது ‘திராவிட மாடல்’ ஆட்சியின் ஒப்பற்ற நாயகர் - முதலமைச்சர் சுட்டிக்காட்டி தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்தோடு, அச்சிறுப்பான்மை மதத்தினரை ஒருங்கிணைத்து அவர்களது உரிமையையும் பாதுகாக்க வலியுறுத்தியுள்ளார்.

இதுதான் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஆட்சி!

இதுதான் திராவிடம் - ‘திராவிட மாடல்’ ஆட்சி!

இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு காவித்தனத்திற்கு இடம் (2026 சட்டமன்றத் தேர்தலில்) தந்தால் மிஞ்சுவது காலித்தனம்தான்!

எனவே எச்சரிக்கை! எச்சரிக்கை!!

இவ்வாறு கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### 169 செவிலியர்களுக்கு பணி நிரந்தரம் – மீதமுள்ள

# 831 பேருக்கு பொங்கலுக்குள் பணி ஆணை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, டிச.27-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (26.12.2025) சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தில், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 169 செவிலியர்களுக்கு பணி நிரந்தர ஆணைகள் மற்றும் பணி மாறுதல் மூலம் 31 பணியாளர்களுக்கு பணிமாறுதல் ஆணைகளை வழங்கி, செவிலியர்களுக்கான பணிமூப்பு பட்டியலினை வெளியிட்டார்.



பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

**1,000 ஒப்பந்த செவிலியர்களுக்கு பணிநிரந்தர ஆணை!**

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, 169 செவிலியர்களுக்கு காலமுறை ஊதியத்திற்கான பணியாணைகள் இன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு MRB ஒப்பந்த செவிலியர்களுக்கு தொடர்ச்சியாக பணிநிரந்தரம் என்பது முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி இன்று வரை 4,825 ஒப்பந்த செவிலியர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மீதமிருக்கும் 8000-த்திற்கும் மேற்பட்ட ஒப்பந்த செவிலியர்களை பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கை வலுப்பெற்று, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, விரைவில் 1000 ஒப்பந்த செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் காலிப் பணியிடங்களாக இது வரை கண்டறியப்பட்ட 169 பணியிடங்களும், செவிலியர் கண்காணிப்பாளர் நிலை-2, போதகர் போன்ற பணியிடங்களில் பதவி உயர்வு வழங்கப்பட்டு அதன் மூலம் 400 பணியிடங்களும், புதிதாக கட்டப்பட்டு வரும் தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடங்களுக்கு புதிய பணியிடங்கள் உருவாக்குவது என்கின்ற வகையிலும் சுமார் 1,000 செவிலியர்கள் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு விரைவில் ஒப்பந்த செவிலியர்களுக்கு பணிநிரந்தரம் ஆணை வழங்கப்பட உள்ளது.

இன்று 169 ஒப்பந்த செவிலியர்களுக்கு பணிநிரந்தர ஆணை வழங்கப்பட்டுள்ளது. மீதமிருக்கும் 831 ஒப்பந்த செவிலியர்களுக்கு விரைவில் பணிநிரந்தர ஆணைகள் வழங்கப்படவிருக்கிறது. அதோடு இன்று 15 மருத்துவ பதிவேடு நுட்புநர்கள், 10 இளநிலை உதவியாளர்கள், 6 தட்டச்சர்களுக்கு பதவி உயர்வுகள் மற்றும் பணிமாறுதல்கள் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற்று அவர்களுக்கும் ஆணைகள் தரப்பட்டுள்ளது. ஆக இன்று 200 பேருக்கு ஆணைகள் தரப்பட்டுள்ளது.

**ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு!**

சங்கத்தினர் வைத்த மற்றொரு கோரிக்கை மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்படவேண்டும் என்பதாகும். முதலமைச்சர் அவர்களால் அரசு ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்பு 1 வருட காலமாக அறிவிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. தற்போது MRB செவிலியர்களுக்கும் அத்தகைய மகப்பேறு விடுப்பு வழங்கும் வகையில் அரசாணை மிக விரைவில் வெளியிடப்படவுள்ளது. நீதிமன்ற உத்தரவின்படி இதற்கு முன்பு மகப்பேறு விடுப்பு எடுத்தவர்களுக்கும் நிலுவை தொகை வழங்கப்படவுள்ளது.

தற்காலிக செவிலியர்களுக்கு மாத ஊதியம் ரூ.14,000 ஆக இருந்ததை முதலமைச்சர் அவர்கள் ரூ.18,000 ஆக உயர்த்தினார். அப்படி வழங்கப்பட்டபோது 400க்கும் மேற்பட்டவர்கள் ஆவணங்கள் சரிபார்த்ததில் குறைபாடு இருந்ததால் வழங்கப்படாமல் இருந்தது. தற்போது அவர்களுக்கு நிலுவை தொகை வழங்கப்படவுள்ளது. தொழிலாளர்கள் மேல் அக்கறை கொண்ட இந்த அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் பேரிடர் காலங்களில் தங்கள் உயிரை துச்சமென மதித்து பணியாற்றியவர்களுக்கு இத்தகைய நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பொங்கலுக்கு முன்பு இந்த பணிகளை முடிக்க திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்நாடு செவிலியர் மேம்பாட்டு சங்கத்தின் பொருளாளர் ஹேமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் நமது சங்கத்தின் சார்பாக பல கோரிக்கைகளுடன் போராட்டங்களை நடத்தினோம். அந்தக் கோரிக்கைகள் நமது அமைச்சர் அவர்களும், துறை சார்ந்த அலுவலர்கள் நேரம் ஒதுக்கி நமது கோரிக்கைகளை முழுமையாக கேட்டு நமது கோரிக்கைகளை நிறைவேற்றி தரப்படும் என்று முடிந்த அளவு முயற்சி செய்து நமது கோரிக்கைகளை வெற்றி பெற செய்திருக்கிறார்கள். முதற்கட்டமான பணிநியமன ஆணை வழங்குவது என்பது மகிழ்ச்சியாக உள்ளது. கடந்த ஆட்சிக் காலங்களில் போராட்டங்கள் செய்தாலும் பேச்சு வார்த்தை என்கின்ற அடிப்படையில் நமது கோரிக்கைகளை காது கொடுத்து கேட்காத அளவிற்கு அரசாங்கமாக இருந்தது. இந்த அரசில் நமது கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து நடவடிக்கை எடுத்த முதலமைச்சர் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கும், அரசுத் துறை அலுவலர்களுக்கும் மிகவும் நன்றி கலந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு நர்சுகள் சங்கத்தின் தலைவர் சக்திவேல் தெரிவித்ததாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் 2024 செவிலியர்களுக்கு பணிநிரந்தர ஆணைகள் தரப்பட்டது. அதனைத் தொடர்ந்து 3500 பேருக்கு இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு பணிநிரந்தர ஆணைகள் வழங்கப்பட்டது மிகவும் பெருமையாக இந்த சங்கத்தின் சார்பாக கருதுகிறோம்.

நமது போராட்டத்தின் வாயிலாக 750 பேர் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்பதை தற்போது 1000ஆக மாற்றி இருக்கிறார்கள். இதற்கு எங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இன்னொரு மகிழ்ச்சியான செய்தி பணி மூப்பு பட்டியல், இந்த பணி மூப்பு பட்டியல் என்பது சுமார் 20 வருடங்களாக கிடப்பில் இருந்தது, இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு பணிமூப்பு பட்டியல் வழங்கியதற்கு வழங்கயிருப்பதற்கு மிகவும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### ஒரே ஆண்டில் இரண்டு முறை ரயில் கட்டணத்தை உயர்த்தி

# ஒன்றிய பா.ஜ.க. அரசு - பொதுமக்களுக்கு புத்தாண்டு சிறப்பு பரிசு(!)

## தயாநிதிமாறன் எம்.பி. விமர்சனம்!

சென்னை, டிச.27-

ஒரே ஆண்டில் இரண்டு முறை ரயில் கட்டணத்தை உயர்த்தி, ஒன்றிய பாஜக அரசு, பொதுமக்களுக்கு புத்தாண்டு சிறப்பு பரிசு அளித்துள்ளதாக தி.மு.க. எம்.பி. தயாநிதிமாறன் விமர்சித்துள்ளார்.



திமுக எம்.பி., தயாநிதி மாறன் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், புத்தாண்டை முன்னிட்டு பயணிகளுக்கு ஒன்றிய பாஜக அரசின் சிறப்பு பரிசாக, இந்த ஆண்டு இரண்டாவது முறையாக ரயில் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக விமர்சித்துள்ளார். கட்டண உயர்வு ஆண்டுக்கு இரண்டு முறை, ஆனால், தமிழ்நாட்டுக்கு சிறப்புத் திட்டங்கள்? இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட இல்லை என்றும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார். 2026 தேர்தல் ஆண்டு என்பதால், பட்ஜெட்டில் தமிழ்நாடு ரயில்வே திட்டங்கள் திடீரென்று ஞாபகம் வருமோ? எனவும் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.





காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் களியாம் பூண்டி. மற்றும்.தினையாம் பூண்டி. ஊராட்சியில். என் வாக்குச்சாவடி. வெற்றி வாக்குச்சாவடி. கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் ஒன்றிய செயலாளர்.கெ. ஞானசேகரன் பேரூராட்சி மன்ற தலைவர். பொன் சசிகுமார். ஒன்றிய நிர்வாகிகள் சுப்பராயன். ருத்ரகோட்டி.டி.பாபு ஒன்றிய கவுன்சிலர். அண்ணாதுரை. ஊராட்சி மன்ற தலைவர்கள். திருமதி. வளர்மதி சுதாகர். திருமதி. சரஸ்வதி பெருமாள். மாவட்ட பிரதிநிதி கோவிந்தராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# உடுமலையில் அறிவுத்திருவிழா விளக்கக் கருத்தரங்கம்!



கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி, திருப்பூர் தெற்கு மாவட்டம் உடுமலைப்பேட்டையில் உள்ள போடிபட்டி, விவாஸ் மஹாலில் 26.12.2025 அன்று, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் அறிவுத் திருவிழா விளக்கக் கருத்தரங்கம் எழுச்சியோடு நடைபெற்றது.

உடுமலை மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் க.செந்தில்குமார் முன்னிலை வகிக்க, திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் வரவேற்புரை ஆற்றினார். ‘தமிழ்நாடு காவிச்சாயம் பூசாமல் இருக்கக் காரணம் திராவிடமும், சமூக நீதியும்’ என்ற தலைப்பில் கழக மாணவர் அணிச் செயலாளர் ராஜீவ் காந்தியும், ‘நவீன தமிழ்நாடும்; கருப்பும் - சிவப்பும்’ என்ற தலைப்பில் கழக செய்தித்தொடர்பு துணைச்செயலாளர் சூரியா கிருஷ்ணமூர்த்தியும் உரையாற்றினார். 400-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று கருத்துக்களை உள்வாங்கியதுடன், சந்தேகங்களை கேட்டும் விளக்கம் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் - மண்டல பொறுப்பாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கழக மகளிர் அணி துணைச் செயலாளர் – அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை வழங்கினர். இறுதியாக மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சா.கவியரசு நன்றி கூறினார்.

மாவட்ட அவைத்தலைவர் ஜெயராம கிருஷ்ணன், மாநில பொறியாளர் அணி துணைச்செயலாளர் சண்முகசுந்தரம், திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.